**செய்தி வெளியீடு எண்560 நாள்: 24.09.2012**

தாட்கோ மூலம் மானியம் வழங்குவதற்கு ரூ.111.25 கோடி நிதி ஒதுக்கீடு.

தாட்கோ மூலம் மானியத்துடன் கூடிய கடன் உதவி பெற தொழில்முனைவோராக விருப்பமுள்ள இந்து ஆதிதிராவிடர்கள் ஆன்லைன் மூலம் விண்ணப்பிக்கலாம்.

மாண்புமிகு ஆதிதிராவிடர் (ம) பழங்குடியினர் நலத்துறை அமைச்சர் திரு என்.சுப்பிரமணியன் தகவல்

தாட்கோ மூலம் மானியம் வழங்குவதற்காக இந்த வருடம் ரூ.111.25 கோடி நிதியினை மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள் ஒதுக்கீடு செய்துள்ளார்கள். மானியத்துடன் கூடிய இக்கடன் உதவி பெற விரும்புபவர்கள் இந்து ஆதிதிராவிடர்களாக இருத்தல் வேண்டும். விண்ணப்பிப்பவர் குறைந்தபட்சம் 18 வயது நிரம்பியவராகவும், 55 வயதிற்குள் உள்ளவர்களும் இதற்கு விண்ணப்பிக்கலாம். இக்கடன் உதவி பெற குடும்ப ஆண்டு வருமான உச்சவரம்பு ரூ.1 இலட்சம் ஆகும். இக்கடன் உதவி மூலம் நிலம் வாங்குதல், நிலத்தை மேம்படுத்துதல் புதிய தொழில்கள் தொடங்குதல், எம்.பி.பி.எஸ், சித்தா, பல் மருத்துவர்கள் கிளினிக் தொடங்க, இளைஞர்களுக்கான சுயவேலை வாய்ப்புத்திட்டத்தில் பயணிகள் ஆட்டோ, சரக்கு வாகனம், பெட்ரோல், டீசல், எரிவாயு சில்லரை விற்பனை நிலையம் அமைக்க, மகளிர் சுயஉதவிக்குழு சுழல்நிதித் திட்டம், மகளிர் சுய உதவிக்குழுக்களுக்கான பொருளாதார கடன் திட்டம் மற்றும் துரித மின் இணைப்பு வழங்கும் திட்டம், இளம் சட்டப்பட்டதாரிகள் அலுவலகம் தொடங்க ரூ.50 ஆயிரம் நிதியுதவி போன்ற பல்வேறு திட்டங்கள் செயல்படுத்தப்படவுள்ளன.

மேற்கண்ட திட்டங்கள் மூலம் பயன்பெற விரும்புவோர்கள் http://application.tahdco.com என்ற இணைய தள முகவரிக்கு சென்று விண்ணப்பத்தினை ஆன்லைனில் 24.09.2012–ம் தேதி முதல் பதிவு செய்யலாம். ஆன் லைன்னில் விண்ணபிக்க கடைசி தேதி 10.10.2012 ஆகும். ஆன் லைனில் மட்டுமே விண்ணப்பங்களை பதிவு செய்யவேண்டும். விண்ணப்பங்கள் ஏற்கப்பட்டவுடன் அதற்கான அத்தாட்சியை விண்ணப்பதாரர் உடனடியாக பெறும் வகையில் இந்த மென்பொருள் வடிவமைக்கப்பட்டுள்ளது. இம்முறையில் விண்ணப்பதாரர்கள் மாவட்ட மேலாளர் அலுவலகங்களுக்கு சென்று விண்ணப்பிக்கத் தேவையில்லை.

பின்னர் விண்ணப்பங்கள் பரிசீலனை செய்யப்பட்டு, சம்பந்தப்பட்ட வங்கிக்கு பரிந்துரை செய்யப்படும். வங்கிகளிடமிருந்து கடன் தர இசைவு தெரிவித்து அதற்கான ஒப்புதல் பெறப்பட்டவுடன் கடன் தொகையில் 30 சதவீதம் அல்லது ரூ.2.25 இலட்சம் இதில் எது குறைவானதோ அத்தொகை மானியமாக வங்கிக்கு தாட்கோவால் நேரடியாக விடுவிக்கப்படும்.

விரைவான, வெளிப்படையான நடவடிக்கைகள் மூலம் அரசின் திட்ட உதவிகள் ஒடுக்கப்பட்ட மக்களுக்கு முறையாக சென்றடைய வேண்டும் என்று மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள் எடுத்துவரும் சீரிய நடவடிக்கைகளின் தொடர்ச்சியாக தாட்கோ கடன் உதவி பெற முதன்முறையாக இணையதளத்தில் ஆன்லைன் மூலம் விண்ணப்பிக்கும் முறையினை மாண்புமிகு ஆதிதிராவிடர் (ம) பழங்குடியினர் நலத்துறை அமைச்சர் திரு. என்.சுப்பிரமணியன் அவர்கள் இன்று (24.09.2012) தாட்கோ தலைமை அலுவலகத்தில் தொடங்கி வைத்தார்கள். அப்போது பேசிய மாண்புமிகு அமைச்சர் அவர்கள் தாட்கோ கடனுதவி பெற விரும்புபவர்கள் ஆன்லைன் மூலம் விண்ணப்பித்து பயன் பெறலாம் என்று தெரிவித்தார்.

இந்நிகழ்ச்சியில் ஆதிதிராவிடர் (ம) பழங்குடியினர் நலத்துறை செயலர் திரு.ஆ.சு.ஜீவரத்தினம், இ.ஆ.ப., தாட்கோ மேலாண்மை இயக்குநர் திருமதி.ஆ.சுகந்தி, இ.ஆ.ப., ஆகியோர் கலந்துகொண்டனர்.

**வெளியீடு: –**

**இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, தலைமைச் செயலகம், சென்னை.**